# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**1. பட்டயக்கணக்காளர் தொழிற்தகைமை பாடவிதானத்தினை நான் எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும்?**

ய. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தில் உள்ள விற்பனை நிலையத்தில் பாடவிதானமானது விற்பனைக்காக உள்ளது.

டி. பாடவிதானத்தின் பிரதியானது பயன்படுத்துவதற்கென பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் வாசிகசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

உ. பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இணையதத்தளத்திற்கு செல்வதன் மூலம் பாடவிதானத்தினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

(www.casrilanka.com → மாணவர்கள் → பாடத்திட்டம் → curriculum 2015

மாணவர் வழிகாட்டல் நூலில் பட்டயக் கணக்காளர் பாடவிதானம் தொடர்பான ஒரு குறுகிய அறிமுகக் குறிப்பும் காணப்படுகிறது.

**2. வினாத்தாளின் அடிப்படையில் நான் பரீட்சையினை மேற்கொள்ள முடியுமா?**

Knowledge Modules இனை வினாத்தாள் அடிப்படையில் மேற்கொள்வதற்கு குறித்த பரீட்சைக்கு உரிய ஏனைய தேவைப்பாடுகளை நிறைவு செய்வதன் மேல் மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். முழுநேர படிப்பினை தொடராத மாணவர்கள் விளைதிறனான முறையில் பரீட்சைக்கான ஆயத்தம் மேற்கொள்ளவும் மற்றும் பரீட்சையில் வெற்றியடைவதற்காகவும் தகுதியினை வினாத்தாள் அடிப்படையில் பூரணப்படுத்துமாறு உறுதியாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**3. என்ன வகையான கற்றல் உபகரணங்கள் காணப்படுகின்றன?**

மாணவர்களுக்கு பின்வரும் கற்றல் உபகரணங்கள் காணப்படுகின்றன.

கற்றல் நூல்கள்

பயிற்சி மற்றும் மீழ்பரிசீலனை நூல்

மாணவர்கள் கற்றல் நூல்களில் கொண்டுள்ள தகவல்களை அவதானமாக வாசித்து அதன் தலைப்புக்களை விளங்கிக்கொள்வது மாத்திரமல்லாமல், மிக முக்கியமாக அவர்கள் கற்றுக்கொண்ட நுட்பங்கள் மற்றும் கோட்பாடுகளை பிரயோகிப்பதன் மூலம் பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும்.

இவற்றை மேற்கொள்வதற்கு, மாணவர்:

- பாட அலகினுள் தரப்பட்டுள்ள அனைத்து உதாரணங்களையும் பயிற்சியாக செய்து பார்ப்பதோடு மாணவர் உரிய தெளிவினை பெற்றுள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்த கற்றல் நூலில் அதற்கு கொடுக்கப்பட்டுள்ள தீர்வுளையும் மீழாய்வு செய்து பார்க்கவும் வேண்டும்.

- கற்றல் நூலில் ஒவ்வொரு அலகிலும் உள்ள செய்முறைப்பயிற்சினை செய்து பூரணப்படுத்த வேண்டும்.

இவற்றுக்கும் மேலதிகமாக, மாணவர்கள் கட்டாயமாக பயிற்சி மற்றும் மீழ்பரிசீலனை நூலினை பயன்படுத்த வேண்டும். மாணவர்கள் தாங்கள் கற்ற விடயங்களை மீழ்பரிசீலனை செய்கின்ற வேளையில், இவ்வகையான வினாக்கள் மாணவர்களுக்கு பரீட்சையினை எதிர்கொள்வதற்கான சிறந்த பரீட்சை அனுபவத்தைக் கொடுக்கும்.

**4. நான் எவ்வாறு கற்றல் நூலினை கொள்வனவு செய்ய முடியும்.?**

- பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் மூன்று பிரதிகளைக்கொண்ட வைப்பு வரவுத்தாளினை பயன்படுத்துமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றீர்.
  1. வங்கியார் பிரதி 2. இலங்கை பட்டயக் கணக்காளர் பிரதி 3. மாணவர் பிரதி
- உரிய கொடுப்பனவை இலங்கை வங்கியின் ஏதாவது கிளையில் இட்டு இலங்கை பட்டயக் கணக்காளர் கணக்கிற்கு வரவு வைக்க வேண்டும். (கொடுப்பனவு வரவுத்துண்டின் பின்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பாட நூலிற்குமான பொருத்தமான வங்கி குறியீட்டு இலக்கத்தினை பாவிக்க வேண்டும்).
- கற்றல் பொதியை பெற்றுக்கொள்வதற்காக வைப்பு வரவுத்துண்டின் பட்டயக் கணக்காளர் பிரதியினை கற்றல் பொதி விநியோகிக்கப்படும் விற்பனைப்பகுதியில் சமர்ப்பிக்க வேண்டும்.
- நாட்டின் பல பாகங்களிலும் அமைந்துள்ள இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் தகவல் நிலையத்திலிருந்தும் உங்களது கற்றல் பொதிகளை பெற்றுக்கொள்ள முடியும்.
- பாடநூல்களை கொள்வனவு செய்ததன் பின்னர் பயிற்சி மற்றும் மீழ்பரிசீலனை நூலினை எந்தக் கொடுப்பனவும் இன்றி இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.

**5. கற்றல் நூல்களின் விலைகள் என்ன?**

தயவுசெய்து அவதானிக்க:

(www.casrilanka.com ⟶ மாணவர்கள் ⟶ கல்வி ⟶ கற்றல் நூலின் பட்டியல் மற்றும் விலைகள்)

**6. கற்றல் நூற்களை பெற்றுக்கொள்வதற்கான இறுதிக்கால எல்லைகள் என்ன?**

ஏதாவது பாடம் ஒன்றினை முதன் முறையாக தோற்றுவதற்கு விண்ணப்பிக்கவுள்ள மாணவர் ஒருவர் பரீடசைக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதிக்கு ஆகக் குறைந்தது ஒரு வாரத்திற்கு முன்னராவது உரிய கொடுப்பனவை மேற்கொண்டு பாட நூற்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.

மாணவர்கள் ஒருபோதும்:

- கற்றல் நூற்களை பெற்றுக்கொள்ள பரீட்சைக்கான விண்ணப்ப இறுதித்திகதி வரையும் காத்திருக்கக் கூடாது.
- பரீட்சையின் பெறுபேறுகள் வெளியானதன் பின்னர் கற்றல் நூற்களை பெற்றுக்கொள்ள காத்திருக்கக் கூடாது.
- கற்றல் பொதியினை பெறுவதற்கான கொடுப்பனவு வரவுத்துண்டினை பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் இணைக்கக்கூடாது.
- காசு வைப்பு வரவுத் துண்டில், பிழையான கொடுப்பனவு குறியீட்டினை அல்லது பிழையான கொடுப்பனவு பெறுமதியனை குறிப்பிடக் கூடாது.
- கற்கை நெறி ஆரம்பிக்கின்ற சந்தர்ப்பத்திலேயே அனைத்து கற்றல் உபகரணங்களையும் பெற்றுக் கொள்ளுமாறு உறுதியாக மாணவர்கள் பரிந்துரைக்கப்படுவதோடு ஆரம்பத்தில் இருந்தே கற்றல் விடயங்களை திட்டமிடுவதோடு மற்றும் பரீட்சை வினாக்களை பயிற்சி செய்து பார்த்து தங்களை தயார்படுத்திக் கொள்ளவும் வேண்டும்.

**7. பாடவிதானம் மாற்றம் அடைந்ததன் பின்னர் மறுபடியும் நான் மீண்டும் கற்றல் பொதியினை கொள்வனவு செய்ய வேண்டுமா?**

ஏற்கனவே நீங்கள் பழைய பாடவிதானத்தின் கீழ் கற்றல் பொதியினை கொள்வனவு செய்து, பாடவிதானம் மாற்றப்படுகின்ற சந்தர்ப்பத்தில், பரீட்சையை தோற்றுவதற்கான ஒரு முக்கிய தேவைப்பாடாக கற்றல் நூல்களை கட்டாயமாக மறுபடியும் கொள்வனவு செய்ய வேண்டும் என்பது ஒரு கட்டாயமான தேவைப்பாடு இல்லை.

(மேலதிக தகவல்களுக்கு இதனை பார்க்கவும்: 2015 ஆம் ஆண்டின் பாடவிதானத்தின் மாற்று ஏற்பாடுகள்)

எனினும், மாணவர்கள் புதிய கற்றல் உபகரணங்களை கற்பதோடு, தங்களை பரீட்சைக்காக தயார்படுத்திக் கொள்ளவும் உறுதியாக பரிந்துரை செய்யப்படுகின்றீர்கள்.

**8. கடந்த கால பரீடசை வினாக்களுக்கான விடைகனை நான் எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும்?**

இலங்கை பட்டயக் கணக்காளர் இணையத்தளத்திற்கு சென்று கடந்த கால பரீட்சைக்கான விடைகளை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

www.casrilanka.com ⟶ மாணவர்கள ⟶ *பரீட்சைகள்* ⟶ suggested solutions

**9. ஏனைய தகுதிகளுக்காக இலங்கை பட்டயக் கணக்காளர் என்ன சலுகைகளை அல்லது விலக்களிப்புக்களை வழங்குகின்றது?**

ஏனைய விபரங்களுக்கு விலக்களிப்பு FAQ இனை பார்க்க.

www.casrilanka.com ⟶ மாணவர்கள ⟶ *கல்வி* ⟶ விலக்களிப்பு FAQ

**10. இலங்கை பட்டயக் கணக்காளர் வாசிகசாலை திறந்துள்ள நேரங்கள் எவை?**

செவ்வாய்க் கிழமை தொடக்கம் ஞாயிற்றுக் கிழமை வரை ஒவ்வொரு நாளும் திறந்திருக்கும். (காலை 8.00 மணி தொடக்கம் மாலை 7.00 மணி வரை).
திங்கட் கிழமை, போயா தினங்கள் மற்றும் வர்த்தக விடுமுறை நாட்களிலும் வாசிக சாலையானலு மூடியிருக்கும்.

**11. கல்விப்பிரிவின் அறிவிப்புக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் இணையத்தளத்தில் எங்கு பிரசுரிக்கப்படும்?**

www.casrilanka.com ⟶ மாணவர்கள ⟶ *கல்வி* ⟶ அறிவிப்புக்கள

**12. KC5 பயிற்சிப் பட்டறையில் நான் எவ்வாறு பங்குபற்ற முடியும்?**

கல்விப் பிரிவானது KC5 பயிற்சிப் பட்டறையினை பரீட்சைக்கு முன்னர் ஒழுங்கமைக்கும். மின்னஞ்சல், இணையத்தளம், அறிவிப்புக்கள் மற்றும் ஏனைய வேறுபட்ட தொடர்பாடல் ஊடகங்கள் மூலமாக மாணவர்கள் இது தொடர்பில் அறிவித்தல் வழங்கப்படுவார்கள்.

**13. இலங்கை பட்டயக் கணக்காளரில் பதிவு செய்யப்பட்ட கல்வி நிறுவகங்கள் யார்?**

www.casrilanka.com ⟶ மாணவர்கள ⟶ *கல்வி* ⟶ செய்யப்பட்ட கல்வி நிறுவகங்கள்

**14. நான் எவ்வாறு கல்விப்பிரிவினை தொடர்பு கொள்ள முடியும்?**

மேலதிக தகவல்களுக்கு இலங்கை பட்டயக் கணக்காளர் ''மாணவர் தொடர்பு நிலையம்'' இனை தொடர்பு கொள்ளவும்.

011-2352000 (Ext:1110,1109)